பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

## சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு

II தீமோ. 4:2

செய்தி மலர்
அக்டோபர் 2011

மலர் 12
இதழ் 06



# பொருளாளரிடமிருந்து

பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களிடத்தில் கிருபை பெருக வாழ்த்துகிறேன்

அன்பானவர்களே கடந்த மாதம் முழுவதும் கர்த்தர் நம் சபை மக்களை பாதுகாத்து நடத்தி வந்தபடியால் கர்த்தருக்கு நன்றி செலுத்துவது மிகவும் உகந்ததாய் இருக்கிறது. கடந்த மாத ஆராதனைகள், ஊழியங்கள் எல்லாவற்றிலும் கர்த்தர் தம் நாம மகிமைக்கென்று செய்த வல்லமையுள்ள செயல்களுக்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன்.நாம் வாழுகின்ற இந்த கடைசி நாட்களில் எல்லாவற்றையும் நம் ஞானத்திற்கேற்ப, நன்மை தீமைகளை பகுத்தறிந்து அதில் தேவையான சிலவற்றை மட்டும் தெரிந்து கொண்டு அவற்றை கொண்டு உலகத்தில் ஜீவிக்க நினைகின்றோம் கிறிஸ்தவ ஜீவியத்தில் தெரிந்து கொள்ளுதல் தெரிந்தெடுத்தல் என்பது மிக முக்கியம்.

நாம் நமக்க வேண்டியதை, நம்முடைய பிள்ளைகளுக்கு வேண்டியவற்றை, குடும்பத்திற்கு, தேவையானதை, நல்ல சபையை, நல்ல போதகங்களை, ஆவிக்குறிய காரியங்களை ஜெப வேளையை கர்ததரின் பணிக்கான ஊழியங்களை தெரிந்தெடுக்கிறோம், இதற்கெல்லாம் நம்மை ஆயத்தப்படுத்த முதலாவது கர்த்தர் நம்மை தெரிந்தெடுக்க வேண்டும். பிரியமானவர்களே அழைக்கப்பட்டோர் அநேகர் தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ ஒரு சிலர் நாம் ஒவ்வொருவரும் அதில் ஒருவராக இருக்க கர்த்தர் கிருபை புரிவாராக. நாம் உலக பிரகாரமாக மட்டும் அல்ல ஆவிக்கு றிய கண்களினாலும் ஆராய வேண்டியது மிகவும் அவசியமாக காணப்படுகிறது

பிரியமானவர்களே பரிசுத்த பவுல் எபேசு சபைக்கு எழுதும் போது இப்படியாக எழுதுகிறார், தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்குமுன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே, பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக, தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்துமூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார்.அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது என்று. எந்த காரியமானாலும் நமக்கு உறுதி படுத்தப்பட்டு இருக்க வேண்டுமென நினைப்போம். மேலே சொன்ன தெரிந்தெடுத்துதலை யார் உறுதி செய்வார்? ஆம் நம்முடைய விசுவாசம் மட்டுமே உறுதி செய்யும், விசுவாசத்தால் மட்டுமே ஜெயம் பெற முடியும்.

தாயின் கர்ப்பத்தில் தெரிந்தெடுத்தார்

சங்கீதகாரனாகிய தாவீதின் அனுபவம் நம்மை தேற்றுகிறது. நான் கர்ப்பத்தில் உற்பவித்தது முதல் உம்மால் ஆதரிக்கப்பட்டேன் என் தாயின் வயிற்றிலிருந்து என்னை எடுத்தவர் நீரே உம்மையே நான் எப்பொழுதும் துதிப்பேன் என்று. நாமும் துதிப்போம் மகிமைபடுத்தவோம். யாக்கோபை தெரிந்தெடுத்து இஸ்ரவேலை உருவாக்கியவர். யாரை கொண்டும் எப்படிபட்ட பெரிய காரியங்களையும் செய்வது கர்த்தருக்கு மிகவும் இலேசான காரியம்.

## “சிறு பிள்ளைகளை தெரிந்து கொண்டார்:

அவர்களை ஏற்றுக் கொண்டு கர்த்தரின் இராஜ்ஜியத்திற்கு ஒப்பிடுவார். (மாற்கு 10:14-16) 5000 புருஷர்கள் இருந்தார்கள் அதில் அநேக செல்வந்தர்களும் இருந்திருக்கலாம். ஆனாலும் அந்த கூட்டத்தில் ஒரு சிறுவனை தெரிந்தெடுத்து (யோவான் 6:9)அவனிடமிருந்து 5 அப்பமும் 2 மீன்களையும் ஆசீர்வதித்து 5000 ஆயிரம் பேரை போஷித்தவர் நம் இயேசு. நமக்கு உள்ளானவைகளை கர்த்தரிடத்தில் கொடுத்து அது ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால், அதை கொண்டு பெரிய காரியங்களை செய்ய முடியும். நாம் நம்முடைய வயதை குறித்தோ சூழ்நிலைகளை குறித்தோ யோசிக்க வேண்டிய தேவையில்லை.

## வாலிப வயதில் தெரிந்து கொள்வார்.

ஆம் கோலியாத்தை வீழ்த்த யாராலும் முடியாது என்று அறை கூவல் விட்டுக் கொண்டிருந்த சூழ்நிலையில்தானே கர்த்தர் தாவீதை (1 சாமு 13:33) தெரிந்து கொண்டார். ஆனாலும் சவுல் முதலாவது தாவீதை நோக்கி நீ பெலிஸ்தனோடு எதிர் யுத்தம் பண்ண உன்னால் ஆகாது ‘நீ இளைஞன்’’ அவனோ சிறுவயது முதல் யுத்த வீரன் என்கிறார். கடைசியாக (1 சாமு 17:37) கர்த்தர் உன்னோடு இருப்பாராக என்கிறார். யுத்தம் கர்த்தருடையது தாவீதின் கையில் பட்டயம் இல்லாதிருந்தது ஆனால் கர்த்தர் கூடவே இருந்தார்.

## குடும்பமாக தெரிந்து கொள்வார்

மனுஷர்களின் அக்கிரமத்தினாலும் இருதயத்தின் பொல்லாத சிந்தனையாலும், பூமியின் சீர்கெட்ட நிலைமையிலும் கர்த்தரின் கண்களில் நோவாவுக்கோ கிருபை கிடைத்தது (ஆதி 6:8) கர்த்தர் நோவாவை நீதிமானாக கண்டார்.

பிரியமானவர்வர்களே மற்றவர்கள் நம்மை ஆகாதவர்களென்று தள்ளிவிடலாம். சங் 118: 22,23) வாசிக்கிறோம் ஆகாததென்று தள்ளப்பட்ட கல் மூலைக்கு தலை கல்லாயிற்று, அது கர்த்தராலே ஆயிற்று ஆம் கர்த்தரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை.

கடவுள் படைப்பிலேயே விஷேசித்த படைப்பான மனுஷனை படைக்க மண்ணைத்தான் தெரிந்து கெண்டார். (ஆதி 2:7) நாம் மண்ணென்று எப்போதும் நினைவு கூற வேண்டும். ஆம் குயவன் கையில் களிமண்ணாக இருப்போம்.

உலகத்தில் தேறினவர்கள் யாருமில்லை ஞானவான்கள், வல்லவர்கள், பிரபுக்கள் அநேகரில்லை ஞானிகளை வெட்கப்படுத்த பைத்தியமானவர்களையும். பலமுள்ளவர்களை வெட்கபடுத்த தேவன் உலகத்தில் பலவீனமானவைகளை தெரிந்து கொள்கிறார். (1கொரி 1:26-28)

நாம் எந்நிலைமையில் இருக்கிறோம், எதோ ஒரு நிலைமையில் இருக்கிறோம், கர்த்தருக்காக அவரின் இராஜ்ஜியத்திற்காக வைராக்கியமுள்ளவர்களாக வாழவே கர்த்தர் கிருபை புரிவாராக.

நம்குடும்பம் கர்த்தர் தெரிந்து கொள்ளப்பட்ட குடும்பம், நம் பிள்ளைகள் கர்த்தர் தெரிந்து கொள்ளப்பட்ட பிள்ளைகள், நம் சபை கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்ட சபை என்று விசுவாசித்து கர்த்தர் நம்மை தெரிந்தெடுத்து நடத்துகிறார், என்ற உணர்வோடு ஒருமித்து கர்த்தருடைய நாமத்தை உயர்த்துவோம். இந்த மாத சபையின் ஊழியங்களுக்காய் ஜெபித்துக் கொள்ளுங்கள் சபையின் ஊழியங்களில் பங்கு பெறுங்கள்

கர்த்தருடைய ஆசீர்வாதம் நம்மனைவரோடும் இருப்பதாக. ஆமென்

அன்பரின் திருப்பணியில்
அன்பு சகோதரன். **ஜெயசேகர்**

# தேவ செய்தி

## காத்துக் கொள்

நம்முடைய வாழ்க்கையில் சில காரியங்களை கஷ்டப்பட்டு, உழைத்து உபவாசித்து பெற்றுக்கொள்கிறோம். அதை காத்துக் கொள்ளவேண்டும் அதை இழந்து போகக் கூடாது. சிலர் வாழ்க்கையில் நன்றாகபடித்து, நல்ல வேலையில் சேர்ந்து அதிகமாக பணத்தை சம்பாதிக்கிறார்கள். அதை மது குடிப்பது, சூதாடுவது, இச்சைகளில் ஈடுபட்டு தீய வழிகளில் அதை அழித்து விடுகிறார்கள். வாழ்க்கைக்குதேவையான, வீடுவாங்குவது, கார், வாஷிங்மிஷின், குளிர்சாதனப்பெட்டி, தொலைக்காட்சிபெட்டி, இப்படிபொருட்களை வாங்குவார்கள். அதை அவ்வப்பொழுது துடைத்து சுத்தம் செய்து, ஒழுங்காக பராமரித்து பாதுகாத்துக்கொள்ளவேண்டும். இல்லையென்றால் நீண்ட நாள் உபயோகப்படாமல் சீக்கிரமே கெட்டுப்போய்விடும். குடும்ப வாழ்க்கையில் கணவன் மனைவி யையும், மனைவி கணவனையும் காத்துக்கொள்ள வேண்டும். பெற்றோர்கள் பிள்ளைகளையும், பிள்ளைகள் பெற்றோரையும் காத்துக் கொள்ள வேண்டும். கொலே 3:18-20 மனைவிகளே கர்த்தருக்கேற்கும்படி உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள். புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள். இது கர்த்தருக்குப் பிரியமானது. பிள்ளைகளே உங்களைப் பெற்றோருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள். இது கர்த்தருக்குப் பிரியமானது. விசுவாசி களே உங்கள் ஆவிக்குரிய தகப்பனாகிய போதகரைக்காத்துக் கொள்ளுங்கள். நீதி 5:13 என் போதகரின் சொல்லை நான் கேளாமலும் எனக்கு உபதேசம் பண்ணினவர்களுக்கு என் செவியைச் சாயாமலும் போனேனே. போதகர்கள் விசுவாசிகளை காத்துக்கொள்ள வேண்டும். 2தீமோத் 4:2 சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு. எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு புத்தி சொல்லு.

ஆவிக்குரிய வாழ்க்கையிலும் நாம் காத்துக்கொள்ள வேண்டிய காரியங்கள் உண்டு. அதைப் பின்வரும் வசனங்கள் மூலமாக அறியலாம்.

### 1. வஸ்திரத்தைக் காத்துக்கொள்:

மனிதன் எது இல்லாமல் இருந்தாலும் வஸ்திரம் இல்லாமல் இருக்க முடியாது. டாக்டர்கள், வக்கீல்கள், ராணுவ வீரர் இவர்களுக்கு எல்லாம் குறிப்பிட்ட உடை இருக்கிறது. அதை பார்த்தே அவர்கள் யார் என்று கூறி விடலாம். பள்ளி மாணவர்களுக்கு சீருடை இருக்கிறது. மனிதன் சந்திரனுக்கு போக பிரத்தேய உடை இருக்கிறது. அதுபோல நாம் பரலோகம் செல்ல சில ஆவிக்குரிய வஸ்திரங்கள் இருக்கிறது. ஏசாயா 61:10 இரட்சிப்பின் வஸ்திரம் நீதியின் சால்வை. ஏசா 52:1 வல்லமையை தரித்துக்கொள் சங் 45:14,13, சித்திரத்தையலாடை பொற்சரிகை, ஏசா 61:3 துதியின் உடை வெளி 3:4 வெண்வஸ்திரம் வெளி

19:8 மெல்லிய வஸ்திரம் உலகம் ஜலத்தினால் அழிக்கப்பட்டபோது நோவா வின் குடும்பம் மட்டும் காப்பாற்றப்பட்டது. உலகம் முழுவதும் தண்ணீர் அவன் ஒன்றும் ஆகவில்லை. சாராயம் என்ற தண்ணீர் அவனுக்குள் சென்ற பொழுது ஆதி 9:21 அவன் திராட்சை ரசத்தைக்குடித்து வெறி கொண்டு தன் கூடாரத்தில் வஸ்திரம் விலகி படுத்திருந்தான். வெளி16:15 இதோ திருடனைப்போல் வருகி றேன். தன் மானம் காணப்படதக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு, விழித்துக் கொண்டு தன் வஸ்திரங்களைக் காத்துக் கொள்ளுகிறவன் பாக்கியவான். ஆவிக்குரிய வஸ்திரத்தை காத்துக் கொள்ள ஜெபம், வேதவாசிப்பு, சபைகூடுதல் அவசியம்.

2. உபா 4:10 உன் கண்கள் கண்ட காரியங்களை நீ மறவாதபடிக்கும், உன் ஜீவனுள்ள நாளெல்லாம் அவைகள் உன் இருதயத்தை விட்டு நீங்காதபடிக்கும் நீ எச்சரிக்கையாயிருந்து உன் ஆத்துமாவை ஜாக்கிரதையாய் காத்துக்கொள். அவைகளை உன் பிள்ளைகளுக்கும், உன் பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் அறிவிக்கக்கடவாய். ஆத்துமாவை காத்துக்கொள்ள வேண்டும். 3யோவான்3:2 பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன். ஆவி ஆத்துமா சரீரம். ஆத்துமா சரீரத்தை சார்ந்து இருக்கக்கூடாது. ஆகவே பவுல் ரோமர் 12:1 ல் உங்கள் சரீரங்களை பரிசுத்தமும் என்று சொல்லி ரோமர் 12:2 ல் உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் என்று எழுதுகிறார். இந்த வேதத்தில் ஆத்துமாவோடு பேசியவர்கள் இரண்டுபேர் சங்கீதக்காரனாகிய தாவீது. சங் 103:1,2 என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி, சங் 42:5:11 சங் 43:5 என் ஆத்துமாவே நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? இன்னொருவன் ஐசுவர்யவான் லூக்கா 12:19 பின்பு ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. நீ இளைப்பாறி புசித்துக் குடித்து பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்து சொல்லிக் கொண்டான்.
ஆகையால் நீங்கள் எபி 12:3 ஆத்துமாவில் சோர்ந்து போகாதபடி ஆத்துமாவை காத்து கொள்ளுங்கள்.

3.சங் 34:13 உன் நாவை பொல்லாப்புக்கும், உன் உதடுகளைக்கபட்டு வசனிப்புக்கும் விலக்கிக் காத்துக் கொள் யாக் 3:6 நாவும் நெருப்புதான் நாவானது முழு சரீரத்தையும் கறைபடுத்தி விடுகிறது. நாவைக் குறித்துவேதம் சொல்வது சங் 52:2 தீட்டப்பட்ட சவரன்கத்தி. சங் 57:4 கருக்கான பட்டயம்,சங் 140:3 சர்ப்பத்தின் நாவு எரே 9:8 கூர்மையாக்கப்பட்ட அம்பு. நாவும், உதடுகளும் சேர்ந்தது வாய் யாக் 3:10 துதித்தலும், சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே இப்படியிருக்கலாகாது. ஆகவே வாயை காத்துக் கொள்ளுங்கள்.

4. நீதி 4:23 எல்லாக் காவலோடும் உன் இருதயத்தை காத்துக்கொள். மாற் 7:21,22 இருதயத்திலிருந்து பதிமூன்று விதமான தூஷணங்கள் வெளி வருகிறது. எரே 17:9 எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது. அதை அறியத்தக்கவன் யார்? சங் 66:18 என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால் ஆண்டவர் எனக்குச் செவி கொடார். எபி 3:12 சகோதரரே ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருந்து மத் 5:8 இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனை தரிசிப்பார்கள். ஆகவே சங் 51:10 தேவனே சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும். நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும் என்றான் இருதயத்தை காத்துக்கொள்ளுங்கள்.

**5.** நீதி 8:32 ஆதலால் பிள்ளைகளே எனக்குச் செவி கொடுங்கள். என் வழிகளைக் காத்து நடக்கிறவர்கள் பாக்கியவான்கள். நீதி 16:25 மனுஷனுக்குச் செம்மையாய் தோன்றுகிற வழியுண்டு. அதின் முடிவோ மரண வழிகள்.

நீதி 3:5,6 உன் சுயபுத்தியின் மேல் சாயாமல் உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள். அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப் படுத்துவார். நம்முடைய வழிகளைவிட அவருடைய வழிகள் ஆயிரம் மடங்கு மேலானவை. ஏசா 55:8 என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல. உங்கள் வழிகள் என் வழிகளும் அல்ல. 1இராஜ 3:14 உன் தகப்பனாகிய தாவீது நடந்தது போல் நீயும் என் கட்டளைகளையும், என் நியமங்களையும் கைக் கொண்டு என் வழிகளில் நடப்பாயாகில் உன் நாட்களையும் நீடித்திருக்கப்பண்ணுவேன் என்றார். வழிகளை காத்துக் கொள்ளுங்கள். சிம்சோன் நியா14:5-8 சிம்சோன் வழிவிலகிப் போனான் கண்ணை இழந்தான்.

**6.** நாகூம் 2:1சிதறடிக்கிறவன் உன் முகத்துக்கு முன்பாக வருகி-றான் அரணைக்காத்துக்கொள் வழியை காவல் பண்ணு. அரையைக் கெட்டியாய்க் கட்டிக் கொள். உன் பெலனை மிகவும் ஸ்திரப்படுத்து. நம்முடைய அரணில் கண், வாய், காது, மூக்கு சரீரம் இவைகள் இருக்கிறது. இவை ஒவ்வொன்றையும் நாம் காத்துக் கொள்ள வேண்டும்.

பிரியமான சகோதர சகோதரிகளே இன்னும் அநேக காரியங்களை குறித்து வரும் மலர்களில் சிந்திப்போம்! கர்த்தர் நம் அனைவரோடும் இருப்பாராக!

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோ. **பிரபு**

# ஊழியர்கள் பகுதி

## குறைகளில் இருந்து கற்றுக்கொள்வோம்

அநேக ஆண்டுகளுக்கு முன்பாக பெந்தெகொஸ்தே ஊழியக்காரர் கூட்டம் ஒன்று நடைபெற்றது. ஒரு பாஸ்டர் எழுந்திருந்து ஆடுகளை திருடலாமா? என்று கேள்வி கேட்டாராம் மற்ற எல்லா பாஸ்டர்களும் இந்த கேள்விக்கு தலைமை போதகர் என்ன பதில் சொல்லப் போகிறார் என்று ஆவலோடு எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்தார்களாம். அப்பொழுது அந்த தலைமை போதகர் எழுந்து உங்கள் ஆட்டை நீங்கள்தான் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் அதை சரிவர கவனிக்காத பட்சத்தில், அதை பட்டினி போட்டால் உங்களுடைய தொழுவத்தை விட்டு நல்ல மேச்சலான விளை நிலத்தை நோக்கி போய்விடும் என்றாராம்,நல்லபதில்.

பெரிய பட்டினங்களில் நாம் கண்கூடாக பார்கிற ஒரு சம்பவம் ஒரு ஹோட்டலோ அல்லது ஒரு சிறிய சிற்றுண்டி விடுதியோ அவைகளில் கூட்டம் நிரம்பி வழியும். பெரிய பெரிய கார்களுடன் செல்வந்தர்கள் கூட வந்து நின்று சிற்றுண்டி அருந்தி செல்வார்கள் ஏனெனில் அந்த குறிப்பிட்ட கடையில் அவர்களுக்கு பிடித்த ருசியான உணவு வகைகள் சமைத்து கொடுக்கிறார்கள் அதனால் அங்கே கூட்டம் நிரம்பி வழிகிறது. அது போல தான் ஊழியக்காரர்களாகிய நாம் முழங்காலில் நின்று வானத்தை அண்ணாந்து பார்த்து பரலோகத்திலிருந்து ஆகாரத்தை பெற்றுக் கொள்பவர்களாக நாம் இருக்க வேண்டும். பெற்ற பின் அதை ஆசீர்வதித்து மற்றவர்களுக்கும் கொடுத்து அவர்களை புசிக்க வைத்து அவர்களை திருப்தியாக்கி அனுப்புங்கள் வானத்தின் மன்னாவினால் அவர்களை போசித்து அவர்களை ஆசீர்வதித்து அனுப்புங்கள்

பிரியமானவர்களே நாம் அன்று ஆண்டவரிடத்வில் நடந்து கொண்ட சீஷர்களை போல் அல்லாமல். வந்த மக்களுக்கு ஆத்துமாவில் பசியுள்ளவர்களுக்கு ஆண்டவருடைய வசனத்தின் மூலம் ஆத்துமாவுடைய பசியையும். அன்னதானத்தின் மூலம் அவர்களுடைய மாமிசமான பசியையும் தீர்த்து அனுப்ப பழகிக் கொள்வோம்.

பிரியமானவர்கனே ஊழியர்கள் பகுதி என்ற தலைப்பிலே கடந்த நான்கு மாதங்களாக நாம் குறைகளில் இருந்து கற்றுக் கொண்டோம், என்ற தலைப்பில் அநேக ஆலோசனைகளை பெற்றுக் கொண்டோம். இனி வரும் மாதங்களில் மற்றுமொரு வித்தியாசமான தலைப்பில் சந்திப்போம். கர்த்தர் நம் ஒவ்வொருவருடைய ஊழியத்தையும் நமது தாலந்துகளையும் அளவில்லாமல் ஆண்டவருக்கென்று செயல்படுத்த கர்த்தர் துணை செய்வாராக ..ஆமென்

# 2011 செப்டம்பர் மாத வேத வினாவிற்கான பதில்கள்

1. 2 நாளாகமம் 7: 1
2. 2 நாளாகமம் 27: 4
3. 2 நாளாகமம் 26: 10
4. 2 நாளாகமம் 16: 9
5. 2 நாளாகமம் 21: 20
6. 2 நாளாகமம் 32: 33
7. 2 நாளாகமம் 16: 14
8. 2 நாளாகமம் 33: 20
9. 2 நாளாகமம் 26: 19
10. 2 நாளாகமம் 14: 9
11. 2 நாளாகமம் 17: 7-9
12. 2 நாளாகமம் 6: 13
13. 2 நாளாகமம் 32: 30
14. 2 நாளாகமம் 22: 3
15. 2 நாளாகமம் 26: 16-20

## 2011 செப்டம்பர் மாத வேத வினாவிற்கு விடை எழுதியவர்கள்

சகோதரி. சித்ரா ஞான சுரேஷ்
சகோதரி. மரகதம் ஸ்டீ:பன்
சகோதரி. லதா கிறிஸ்டோபர்
சகோதரி. குமுதினி வில்ஸன்
சகோதரி. ஜான்ஸி அற்புதராஜ்
சகோதரி. மரியா ஆஸ்டின்
சகோதரி. எஸ்தர் விசு
சகோதரி. சுகந்தி தம்புகுமார்
சகோதரி. அனுஷூயா டேவிட்சன்
சகோதரி. ஜீனா சதீஷ்குமார்
சகோதரி. ஹேனா எசேக்கியல்

சகோதரர். ஜான்ஸன்
சகோதரர். D. சுந்தர்
சகோதரர். எட்வின் ஷாம் ஞான துரை
சகோதரர். ஜான்
சகோதரர். மணிராஜ்

# 2011 அக்டோபர் மாத வேத வினா

1. ‘அவன் மென்மேலும் பெரியவனானான்’ அவன் யார்?

2. ஒரு அரண்மனையில் இருந்த ஐநூறு பேரை கொன்றவன் யார்?

3. நூற்றிருபத்தேழு நாடுகளை அரசாண்டு வந்த பிரபல ராஜா யார் ?

4. ஜோடிக்கப்பட்ட பெண் எங்கே பிரவேசிப்பாள்?

5. பூமி தன் வாயை திறந்து வெள்ளத்தை விழுங்கினதாக வாசிப்பதெங்கே?

6. 127 நாடுகளை ஆண்ட மன்னன் யார்?

7. நான் சட்டத்தை மீறி ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன் என்று சொன்ன ராணி யார்?

8. நான் செத்தாலும் சாகிறேன் என்ற அரசி யார்?

9. ரூபவதியும் சவுந்தர்யமுடையவளுமாயிருந்த பெண் யார்?

10. ராஜாவின் பாதங்களில் விழுந்து அழுத பெண் யார்?

11. துயரமான மகா சத்தத்தோடு அலறினவன் யார் ?

12. தன் பிராணனுக்காக விண்ணப்பம் பண்ண எழுந்து நின்றவன் யார்?

13. விருந்துண்டு சந்தோஷம் கொண்டாடவும் ஒருவருக்கொருவர் வரிசைகளை அனுப்பவும் எளியவர்களுக்கு தான தர்மம் செய்யவும் திட்டம் பண்ணினவன் யார்?

14. எஸ்தரின் மறு பெயர் என்ன ?

15. யூதரை அழிக்க துஷ்டனாகிய ஆமான் காரிய காரரிடம் கொடுக்கலாம் என்று சொன்ன தொகை எவ்வளவு ?

விடைகளை வருகின்ற 21-10-2011 க்குள் சபையின் செயலாளரிடம் நேரில் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். விடைகளை எஸ்தர் புத்தகத்தில் தேடி கண்டுபிடிக்கவும்

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதர சகோதரிகளுக்கு தாங்கள் இந்திய தேச மிஷனரிகளை தாங்கும் ஊழியத்திற்கு பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ.ஆரோக்கியதாஸ் (99870126) அவர்களிடத்திலும். திக்கற்ற பிள்ளைகளின் ஊழியத்திற்கென்று பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ.தாமஸ் (66810423) அவர்களிடத்திலும், போக்குவரத்து ஊழியத்துக்கென்று கொடுக்கிறவர்கள் தங்கள் காணிக்கைகளை சகோ.ஸ்டீ:பன் (65868048) அவர்களிடத்திலும் கொடுத்து, ஊழியத்தை தாங்க அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்

உன்னுடைய கை உன் விரோதிகளின்மேல் உயரும், உன் சத்துருக்களெல்லாரும் சங்கரிக்கப்படுவார்கள். —மீகா–5:9

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வன். ஜெய்ஸன் ஆல்பஸ் ஜேம்ஸ்
செல்வன். அஸ்நஸ் டேனியல்
செல்வன். அற்புத அலக்ஸாண்டர்
செல்வன்.ரோஷன் அசோக்குமார்
செல்வன். ஸ்ரீதர்

செல்வி. ஷாலோம் கிரேஸ் ஆமோஸ்
செல்வி. கீதா கொமையன்
செல்வி. லின்டா வில்கின்ஸ்
செல்வி. பிரியங்கா சத்தீஷ் குமார்
செல்வி. எபின் கேட்சில் ஜெயகுமார்
செல்வி. சோபியா பாண்டியன்

சகோதரி. ஜான்சி அற்புதராஜ்
சகோதரி. கஸ்தூரி மனோகர்
சகோதரி. ஜெபா
சகோதரி. விக்டோரியா ஃபிராங்க்
சகோதரி. மரகதம் ஸ்டீஃபன்
சகோதரி. பியூலா மெர்ஸி பால் ஜெகநாதன்
சகோதரி. அனுஷூயா டேவிட்ஸன்
சகோதரி. அருள் மேரி அகிலா

சகோ. தாமஸ் ரவீந்திரன்
சகோ. ஸ்டாலின் சுனில் வினீஸ்
சகோ. ராஜாசிங்
சகோ. ஜான் வெஸ்லி
சகோ. தம்புகுமார் டெனிஸ்
சகோ. மாற்கு ஆன்டனி
சகோ. கோபி நாத்
சகோ. வில்கின்ஸ் தினகரன்
சகோ. ராஜாசிங்
சகோ. ஆஸ்டின் முத்தையா



நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருப்பேன் நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை

யோசு-1:5

## இந்த மாதம் திருமண நாளைக் சிறப்பிக்கிறவர்கள்

திருமதி - திரு. ஜோசஃப்
திருமதி - திரு. செங்குட்டுவன்
திருமதி - திரு. செபாஸ்டின் ஜோசஃப்

# 2011 அக்டோபர் மாத ஆலய ஆராதனை

**வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4 -10 முதல் 5-45 வரை**

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 7-10-2011 | சகோ. ஐசக்துரை | - சகோ. கிறிஸ்டோபர் |
| 14-10-2011 | சகோ. ஜெயசேகர் | - ஸ்டாலின் |
| 21-10-2011 | உபவாச ஆராதனை | |
| 28-10-2011 | சகோ. ரவிச்சந்திரன் | - சகோ. பால் ஜெகநாதன் |

**ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5-00 முதல் 6-15 வரை**

| நாள் | செய்தி |
|---|---|
| 2-10-2011 | சகோ. ஐசக் துரை |
| 9-10-2011 | சகோ. அற்புத ராஜ் |
| 16-10-2011 | சகோ. ஆரோக்கியதாஸ் |
| 23-10-2011 | பிரேம் குமார் |
| 30-10-2011 | சகோ. எபிநேசர் |

**சகோதரிகள் ஐக்கிய கூடுகை -**
**நாள் 5-10-2011 இடம் : சகோதரி. சிந்து சாஜன்**
**அவர்கள் இல்லம் (மங்கா:ப்)**

**வேத வினா போட்டி (முழு இரவு ஜெபம் - 13-10-2011**
**(இடம்: பரிசுத்த பவுல் ஆலயம். அஹமதி தமிழ் திருச்சபை )**

**வாலிபர்கள் ஐக்கிய கூடுகை - நாள் 28-10-2011 நேரம் : மாலை 6:30 மணிக்கு**
**சகோ. சதீஷ் குமார் அவர்களின் சார்பில்**
**இடம் : சபையின் ஜெப வீடு பாஹாஹீல்**
**முழு வேதாகமத்தில் இருந்து கேள்விகள் கேட்கப்படும்**

# குடும்ப பகுதி

## கிறிஸ்தவ குடும்பம் பரலோகத்தின் வாசல்

இல்லத் தலைவனின் உரிமையை பறித்து, தேவன் தனக்கு நியமித்துள்ள கடமையை அவன் செவ்வனே நிறைவேற்ற விடாமல் தடுப்பதற்கு சமானம். அப்படி குடும்ப தலைவனின் உரிமை பரிபோகும் போது அக்குடும்பத்தின் சமாதானமும்,மகிழ்ச்சியும் பறி போவது ஆச்சர்யமில்லை.

**மனைவினிடத்தில் அன்பு கூறுங்கள் :**

புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள் (எபே 5:25)

புருஷர்களே தங்கள் மனைவியின் மேல் மாயமற்ற உண்மையான அன்பை செலுத்தும் போது, மனைவி கணவனின் அதிகாரத்திற்கு அடங்கி நடப்பதில் எந்த பிரச்சனையும் இராது' இதை பவுல் அப்போஸ்தலன் கிறிஸ்து மேல் வைத்த அன்பிற்கு ஒப்பிட்டு எழுதுகிறார்' (எபே 5:2)

நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம் மேல் வைத்த தமது அன்பை விளங்க பண்ணினார்' (ரோ 5:8)

எபேசியர் 5:25ம் வசனத்தை திரும்பவும் இங்கே பார்ப்போம்.

புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்பு கூறுங்கள் அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து தம்மைதாமே அதற்காக (சபைக்காக) ஒப்பு கொடுத்தார்: ( எபே 5:27)

கணவன் தன் மனைவிக்கு தியாகம் செய்யவும், ஏன் தன் ஜீவனை கொடுக்கவும் ஆயத்தமாயிருக்க வேண்டும் என்று வேதம் கூறுகிறது. மாரீஸ் செருள்ளா என்ற உலக பிரசித்தி பெற்ற ஊழியர் ஆபிரகாமின் மனைவியை கேராரின் ராஜாவாகிய அபிமேலக்கு ஆள் அனுப்பி தன்னுடைய அரண்மனைக்கு அழைத்து கொண்டு வந்த சம்பவத்தை பற்றி (ஆதி 20:2) விளங்கும் போது அவர் உணர்ச்சி யோடும் கூறும் வார்த்தைகள். ஆபிராகாபின் மனைவியைக் கேட்டது போல யாராவது என்னிடத்தில் வந்து உன் மனைவியை கொடு என்று கேட்டால் கம்பியை எடுத்து அவனை நையப் புடைத்து விரட்டாமல் விடமாட்டேன். ஒரு வேளை ஒரு படையே வந்தாலும் என் செத்த பிணத்தை கடந்துதான் என் மனைவியை அவர்கள் தொடமுடியும் என்று சொல்லுவார்கள்.

தங்கள் மனைவிக்காக உயிரைக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை அவர்களுக்கு வராவிட்டாலும், தங்களது அன்பை வெளிபடுத்த அனுதின வாழ்கையில் அடிக்கடி அநேக சந்தர்ப்பங்கள் வருவதை நாம் மறந்துவிடக்கூடாது. மனைவி சுகவீணமாய் படுத்திருக்கும் சமயங்களிலும் உதவி செய்து உங்கள் அன்பை வெளிபடுத்தலாம். மனைவிக்கு சமையலறையில் நீங்கள் உதவி செய்வதற்கு நீங்கள் சமையலறைக் கலைஞராக இருக்க அவசியமில்லை. உங்கள் மனைவி உங்களுக்கு உதவி செய்வதற்கு நீங்கள் பாராட்டி

நாளாயிற்று?

### கணவன் தான் ஒப்புரவாகுதற்கு முந்த வேண்டும்: -

தேவனுக்கும் - மனிதனுக்கும் (சபை ) இடையில் முறிவு பிளவு ஏற்பட்ட போது, ஒப்புரவாகுதற்கு ஏதுவான காரியங்களை முதலில் ஆரம்பித்தவர் ஆண்டவர் அதே போல கணவனுக்கு (தேவனுக்கும் ஒப்பனை ) மனைவிக்கும் (சபைக்கும் ஒப்பனை ) இடையில் பிணக்கு, மனக்கசப்பு ஏற்பட்டால் அதில் ஒப்புரவாகுவதற்கு, கணவன் தான் அடியை எடுத்து வைக்க வேண்டும் என்பது இதிலிருந்து தெளிவாகிறது. ஒரு பிரசங்கியார் தனது பிரசங்கத்தில் இப்படியாகச் சொன்னார். எனக்கு என் மனைவிக்கும் இடையில் ஒரு தடவை கூட மனத்தாங்கல் ஏற்பட்டதே கிடையாது' என்ற பிரசங்கியாரின் கூற்றை என் மனம் நம்ப மறுக்கிறது. இருவருக்கிடையில் பிளவு ஏற்படாதபடி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையோடு, நன்கு ஒருவரையொருவர் புரிந்து கொண்டு மனது புண்படாமல் நடந்து கொள்வது மிகவும் விரும்பத்தக்கது, மெச்சத்தக்கது, இலட்சியமானது ஆனால் நம்முடைய நடைமுறை குடும்ப வாழ்க்கையில் பலவிதமான சூழ்நிலை அழுத்தங்கள் காரணமாக, பொருளாதார நெருக்கடியின் நிமித்தம் கணவன், மனைவிக்கிடையில் ஈசாக்கு ரெபேக்காளுக்கு கிடையில் ஏற்பட்டது போல தீவிர கருத்து வேற்றுமை, மனஸ்தாபம் ஏற்படலாம், அப்படிப்பட்ட சூழ்நிலை வரும் போது, அந்த மனஸ்தாபத்திற்கு காரணம் என்ன? என்பதை ஆராய்ந்து ஆவன செய்வதில்தான் மகிழச்சியான கிறிஸ்தவ குடும்பத்தின் ரகசியம் அடங்கியிருக்கிறது. குடும்பத்தை உண்டாக்கும் அப்படிபட்ட சூழ்நிலை திரும்ப குடும்பத்தில் உருவாகி, சிறிய பூசல் பெரிய புயலாக உருவெடுப்பதைத் தவிர்க்க வேண்டும் கணவன் சொல்ல, மனைவி அதை வேறு அர்த்தத்தில் புரிந்து கொள்வது. மனைவியின் பேச்சில் குற்றம் கண்டுபிடிக்க கணவன் முயல்வது - இது போன்ற செயல்கள் கணவன் மனைவி உறவில் ஊனம் உண்டாக்குகிறது. புருஷர்கள் கணவன்கள், தன் சரீரத்தை கல்லினால் காயப்படுத்தி கல்லறையில் குடியிருந்த லேகியோன் பிசாசு பிடித்தவனுக்கு ஒப்பாயிருக்கிறார்கள் என்றால் மிகையாகாது.

## மனைவி

அடுத்த மகிழ்ச்சியான குடும்பத்தில் நாம் சந்திக்க இருப்பது,

மனைவி - தாய் ஸ்தானத்தில் உள்ள குடும்பத்தில் தலைவி மனைவிகளுக்கு வேதம் கூறும் ஆலோசனைகளைப் பார்ப்போம்.

( தொடரும் )

# சங்கீத புத்தகங்களை குறித்து தொடர்ந்து தியானிப்போம்

## சங்கீதம்

### சங்கீதத்தை குறித்த ஒரு செய்தி சுருக்கம்

**பல வகையான சங்கீதங்கள் பல்வேறு இடங்களில் ஏறத்தாழ 1200 ஆண்டு இடைவெளியில் பல ஆசிரியர்களால் எழுதப்பட்டன. முடிவாக பெயர் தெரியா ஒருவர் அவைகளை தொகுத்து ஐந்து நூல்களாக வகுத்துள்ளார். ஒவ்வொரு நூலும் இறை புகழுறையோடு முடிவடைகிறது. முதலாம் சங்கீதம் முழு நூலுக்கும் ஒரு பொருத்தமான முன்னுரையாக அமைந்துள்ளது. அதே சமயத்தில் 150- ஆம் சங்கீதம் ஒரு பொருத்தமான முடிவுரையாக அளிக்கப்பட்டுள்ளது. 22,23,24, ஆம் சங்கீதங்கள் இயேசு பெருமானை நல்ல மேய்ப்பராக வெளிப்படுத்துகின்றன. (யோவான் 10:11) எபி 13:20 பெரிய மேய்பராகவும் வெளிபடுத்துகின்றன. 120 முதல் 134 வரையுள்ள சங்கீதங்கள் மேல் நோக்கி ஏறும் பாடல்களாக (ஆரோகணம்) அமைந்துள்ளது. எருசலேமுக்கு பஸ்கா பண்டிகைக்காக பயணமாக செல்லும் போதும், அல்லது ஆலயத்திற்கு செல்ல படிகள் ஏறும் போதும் மக்கள் இச்சங்கீதங்களை பயன்படுத்தி இருக்கலாம் என நினைக்க தோன்றுகிறது. 93 முதல் 100, 103 முதல் 107 ஆகிய சங்கீதங்கள் துதியின் சங்கீதங்களாகும். 145 முதல் 150 வரையுள்ள சங்கீதங்கள் அல்லேலூயா சங்கீதங்களாகவும் பயன்படுத்தப் படுகின்றன.**

### சங்கீதங்கள் 1 - 41– முதல் நூல்

**பெரும்பான்மையானவை தாவீதின் ஜெபங்களாகும்**(41:37)**இந்த நூலில் ஒரு சில யாவராலும் நன்கு அறிய பட்ட சான்றுகளாக விளங்குகின்றன.**

**இறைவனால் பேறு பெற்றவனும், துன்மார்கனும்** (1:1-6)
**வருகின்ற அரசர். முதல் பெரிய சங்கீத தீர்க்கதரிசனம்**(2:1-12)
**தள்ளப்பட்ட அரசர்** (2:1-3)
**உறுதி செய்யப்பட்ட அரசர்** (2:4-6)
**ஆட்சி செய்யும் அரசர்** (2:7-9)
**அரசருக்கு ஆயத்தம்** (2:10-12)
**இறை மக்களின் துன்பங்களும், சோதனைகளும்.** (2:4-6)
**மேசியாவாகிய மனித குமாரனின் மேன்மை சங்**(1:1-9) **மத்தேயு**(21:16-1) **1கொரி**(15:27) **எபி** (2:6-9)
**பகைவரை மேற்கொண்டு வெற்றிக்காக துதித்தல்** (9:1-20)
**கடவுள் நியாய தீர்ப்புக்காக விண்ணப்பம்** (10:1-18)
**மனுபுத்திரரை சோதித்தல்** (11:1-7)
**இறைவனின் தூய்மையான வார்த்தைகள்** (12:1-8)
**இறைவனின் பதிலுக்காக ஜெபித்தல்** (13:1-6)
**துன்மார்க்கரின் முடிவு** (14:1-7)

**(தொடரும்)**

# Praise the Lord

## இயேசு உன்னை அழைக்கிறார்

எனக்கன்பான வாலிப சகோதர சகோதரிகளே! இன்ப இயேசு ராஜாவின் ஈடு இணையில்லா நாமத்தில் வாழ்த்துக்கள். இருண்டதொரு பள்ளத்தாக்கை நோக்கி இடையறாது உருண்டு கொண்டிருக்கும் உலகத்தில் .... கண்ணின் மணியை போல் காக்கும் கர்த்தர் நமக்கு உண்டு என்பதால் நாம் எதிர்காலத்தை நம்பிக்கையோடு எதிர் நோக்குகிறோம். ஆனால் தேவனற்ற உலகமோ நிம்மதியை தேடி நிலையில்லாமல் அலைகிறது. நம்பிக்கை ஏது மின்றி நாட்களை நகர்த்துகின்றது. தேவனை தேடாமல் இருப்பதே அபாயம் எனும் நிலை இருக்கும் போது இன்னும் பலர் தேவனுக்கு எதிரான உணர்வோடு வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்தோ பரிதாபம். தேவ நம்பிக்கை கொண்ட யூதர்கள் இன்றும் இயேசுவை மேசியாவாக ஏற்கவில்லை. கிறிஸ்துவாகிய மேசியா அவர் இல்லை என்பதில் அப்படியொரு அசைக்க முடியாத நம்பிக்கை. ஓ.. இது எத்தனை அபாயம்.

ஒரு முறை மேலை நாடு ஒன்றில் ஒரு கத்தோலிக்க மருத்துவமனையில் யூத பெண் ஒருத்தி குழந்தை பேற்றிக்காக அனுமதிக்கப்பட்டாள். வைராக்கியமான யூத பெண் அவள். பேறு காலத்திற்கான வலியில் துடித்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு ஒதுக்கப்பட்டிருந்த அறையில் இயேசு கிறிஸ்துவின் உருவப்படம் ஒன்று மாட்டப்பட்டிருந்தது. அந்த படத்தை நோக்கி பார்ப்பது போல் இருந்தது. விவரிக்க முடியாத அருவருப்பு அவளது முகத்தை ஆக்கிரமித்தது. மருத்துவ மனையில் உதவியாளராக பணியாற்றிய கன்னியா ஸ்திரியை அழைத்து. இந்த யூதனின் ஓவிய ததை அகற்றுங்கள் என்று கூறினாள். திடுக்கிட்டு போன கன்னியாஸ்திரி. ஏன் ஏன் அப்படி கூறுகிறீர்கள். என்று கேட்டாள். அதற்கு அந்த யூத பெண் கூறினால் எனக்கு பிறக்க போகும் குழந்தை இந்த யூதனை பார்க்க கூடாது என்றால். அப்படியே அதிர்ந்து போன கன்னியாஸ்திரி டாக்டராக பணிபுரியும் மற்றொரு கன்னியாஸ்திரியிடம் விஷயத்தை கூறினார்.

அந்த டாக்டர் வந்து அந்த யூத பெண்ணிடம் அவர்தான் வரப்போகும் மேசியா. உலக இரச்சகர், உனது பரிகாரி, நீதியுள்ள நியாதிபதியாக என்று எவ்வளவோ சாமாதானம் கூறியும் அவள் சமாதானம் அடையவில்லை. மூர்க்கமான தனது வேண்டுகோளை மிண்டும் மீண்டும் வலியுறுத்திக் கொண்டே இருந்தாளாம். கோபமடைந்த கன்னியாஸ்திரியான டாக்டர் பெண்ணே இது ஒரு கிறிஸ்தவ மருத்துவமனை. இங்கே உள்ள சுவர்களை எங்களது விருப்பப்படி, எங்களது மத நம்பிக்கையின்படி அலங்கரிப்பதற்கு எங்களுக்கு உரிமை உண்டு. உனக்கு அது பிடிக்கவில்லை என்றால் நீ விருப்பும் வேறு ஒரு மருத்துவ மனைக்கு மாறிக் கொள்ளலாம் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை, ஆனால் உனது கோரிக்கையை எக்காரணத்தை கொண்டும் நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது என்று கண்டிப்புடன் கூறி சென்று விட்டாள்.

அந்த யூத பெண்ணிற்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. பிரசவ வேதனை ஒரு புறம். இயேசுவின் மீதுள்ள ஒரு கசப்பு ஒரு புறம், அப்படியே பற்களை கடித்துக் கொண்டு இருந்து விட்டாள். பல மணி நேர போராட்டத்திற்கு பின் அந்த யூத பெண்ணிற்கு ஒரு அழகான ஆண் குழந்தை பிறந்தது வெளி வந்த அந்த குழந்தையை பார்த்த அனைவருக்கும் இரத்தம் உறைந்தது. முதுகு தண்டு சில்லிட்டு போனது காரணம் ... என்ன தெரியுமா? இந்த அழகிய ஆண்குழந்தைக்கு கண்ணின் இமைகளுக்கு அடியில் விழிகள் இல்லை பிறவிக்குருடனாய் பிறந்தது அந்த யூதக்குழந்தை. பிறக்க போகும் குழந்தை (இயேசு கிறிஸ்துவின் ) படத்தை பார்க்க கூடாது என்ற அந்த யூதத்தாயின் வேண்டுகோள் மனிதரால் நிராகரிக்கபட்டது. தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டது ! அந்தோ எத்தனை கொடூரமான நியாய தீர்ப்பு!

உண்மையில் அது ஒரு சாதாரண ஓவியம்தான், ஆராதனைக்கு உரியது அல்ல எந்த அடையாளங்களும் இயேசு கிறிஸ்துவுக்கு பின் பல நூறு ஆண்டுகளுக்கு பின்னால், பிறந்த ஓவியன் ஒருவனின் கற்பனைதான் அந்த ஓவியம். இயேசு கிறிஸ்துவின் உண்மையான முகம் வேறு ஒன்றாக கூட இருந்திருக்க கூடும். எனினும் அந்த யூத பெண் ஒரு படத்தில் மீதல்ல, தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மேலேயே கசப்பு தேவனது கோபத்தீயை கொளுந்து விட்டு எரிய வைத்தது.ஓ... இந்த கசப்பு உணர்வு அவளது குழந்தையின் வாழ்க்கையை இருட்டடிக்க போதுமானதாக இருந்தது.

தேவன் அன்புள்ளவர் தான்... எனினும் நீதியுள்ள நியாதிபதி அவர்!!

தேவன் நீடிய பொறுமையுள்ளவர்தான்..... எனினும் அவரது கோபம் எரி நெருப்பிலும் கொடியது. !!!!!

தேவன் இரக்கமுள்ள இரட்சகர்தான்...... எனினும் அவர் நியாதிபதியாக நிற்கும் போது பலவானும் மனங்கசந்து கதர நேரிடும்..

எனக்கன்பான சகோதரனே சகோதரியே.. என்னுடைய தாயார் எனக்கு கூறும் பல அறிவுரைகளில் இதுவும் ஒன்று. என் இயேசு சொன்னார் என்னோடிராதவன் எனக்கு பகைஞனாய் இருக்கிறான். நீ தேவனோடு இருக்கிறாயா? அல்லது தேவனுக்கு பகைவனாக இருக்கிறாயா? உனக்கு இயேசுவின் மீது நம்பிக்கை இருக்கலாம், எனினும் தேவனுக்கு விருப்பமில்லாத கிரியைகள் உன்னிடத்தில் இருந்தால் அது உன்னை தேவ பகைஞனாக மாற்றிவிட போதுமானது. இதோ இயேசு உன்னை அழைக்கிறார். அன்புடன் அவர் உன்னை அழைக்கும் போது அவரண்டை வந்துவிடு நியாயதீர்ப்பு நாள் நெருங்குகிறது நேசர் வரக்கூடிய நேரம் நெருங்கி கொண்டே இருக்கிறது, தேவனை நியாயதிபதியாக அநுபவிப்பதை விட இரட்சகராக அவரை சேவிப்பது நலமல்லவா? கொஞ்ச காலம்தான் அவரது கோபம் பற்றி எரியும் காலம் சமீபம். அவரை அண்டிக் கொள்ளுகிற யாவரும் பாக்கிய வான்கள். அல்லேலூயா! கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக... ஆமென்

# The "missing Day" Found by NASA

There is a story circulating that the National Aeronautics And Space Administration has proven that there was a "missing day" in past, just as a story in the Bible relates. While I've seen many Web sites simply repeating the story, and few claiming that it is not true, I haven't seen much anything explaining why this story is unlikely to be true. I am quite aware that I am wading into an area typically fraught with danger and that it is not clear anything that I say, no matter how reasonable, can change anybody's mind. Nonetheless, if a more scientific perspective is wanted, read on.

**The "missing Day" Story**

Did you know that the space program is busy proving that what has been called myth in Bible is true? Mr.Harold Hill, President of the Curtis Engine Company in Baltimore Maryland and a Consultant in the space program, relates the following development:

I think one of the most amazing things that God has for us today happened recently to our astronauts and space scientists at Green Belt, Maryland. They were checking the position of the sun, moon, and planets out in space where they would be 100 years and 1000 years from now.. We have to know this so we won't send a satellite, up and have it pump into some thing later on during its orbits. We have to lay out the orbits in terms of the life of the satellite, and where the planets will be so the whole thing will not bog down..

They ran the computer measurement back and forth over the centuries and it came to a halt. The computer stopped and put up a red signal, Which meant that there was something wrong either with the information fed into it or with the results as compared to the standards. They called in the service department to check it out and they said what's wrong?

Well they found there is a day missing in space in elapsed time. They scratched their heads and tore their hair. There was no answer. Finally, a Christian man on the team said, you know, one time I was in sunday school and they talked about the sun standing still. while they didn't believe him, they didn't have an answer either, so they said, Show us. He got a Bible and went back to the book of Joshua where they found a pretty ridiculous statement for any one with common sense.

there they found the Lord saying to Joshua, Fear them not, I have delivered them into thy hand; there shall not a man of them stand before thee. Joshua was concerned because he was surrounded by the enemy and if darkness fell they would overpower them. So Joshua asked the Lord to make the sun stand still! That's right---The sun stood still and the moon stayed --- and hasted not go down about a whole day!

The astronauts and scientists said, There is the missing day! They checked the computers going back into the time it was written and found it was close but not close enough. The elapsed time that was missing back in Joshua's day was 23 hours and 20 minutes --- not a whole day. They read the Bible and there it was about (approximately) a day.

These little words in the Bible are important, but they were still in trouble because if you cannot account for 40 minutes you'll still be in trouble 1000 years from now. Forty minutes had to be found because it can be multiplied many times over in orbits...

As the Christian employee thought about it, remembered somewhere in the Bible where it said the sun went backwards. The scientists told him he was out of his mind, but they got out the Book and read these words in 2 kings: Hezekiah, on his death-bed, was visited by the prophet Isaiah who told him that he was not going to die. Hezekiah asked for a sign as proof. Isaiah said Do you want the sun to go ahead 10 degrees? Hezekiah said, It is nothing for the sun to go ahead 10 degrees, but let the shadow return backward 10 degrees. Isaiah spoke to the Lord and the Lord brought the shadow ten degrees backward! Ten degrees is exactly 40 minutes! Twenty three hours and 20 minutes in Joshua, plus 40 minutes in second Kings make the missing day in the universe!

Isn't it amazing? Our God is rubbing their noses in His Truth! References: Joshus 10:8 and 12,13 , 2 Kings 20:9-11



Sister. Glory Naomi Alpas James

# கடந்த மாத நிகழ்வுகள்

## கடந்த மாதம் சபையின் மூலம் நடந்த வாலிபர் ஐக்கிய கூடுகை நிகழ்ச்சியின் ஒரு சில புகைபடம் தங்களின் பார்வைக்கு










உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்


செயலாளர் சகோ. ஜஸ்டின் சுந்தராஜ்

97153421- 97376456

பொருளாளர் சகோ. ஜெயசேகர்

23711698 - 66442727 - 90024654

பெண்கள் ஐக்கிய சங்க தலைவி

சகோதரி : அனுஷூயா டேவிட்ஸன்

23922536 - 97148472

வாலிப ஐக்கிய குழு தலைவர்

சகோ. எபிநேசர் 23922058- 66857827

சபையின் அஞ்சல் விலாசம்

your Name...... Post box no 46795,
Fahaheel 64018 KUWAIT

Church E mail Address

ahmaditamil@hotmail.com

Church Website Address

www.ahmaditamilcongregation.org


தங்களது ஜெப விண்ணப்பங்கள் எதுவாக இருந்தாலும் எங்களுக்கு தெரிவிக்கவும், உங்களுக்காக ஜெபிக்க எப்பொழுதும் ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது


Private circulation